உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 11.07.2026 • மலர் 04 • இதழ்: 192 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 11.07.2026 • Vol : 04 • Issue : 192 • Page : 4 • Rs. 5/-

# கரூர் சம்பவம் யார் சொல்லி நடந்தது என்பது தெரியும்...

## மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் விஜய்



கரூர், ஜூலை 11
தமிழகசட்டசபைதேர்தலை முன்னிட்டு, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் தேதி கரூரில் நடைபெற்ற த.வெ.க. பிரசார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் இறந்துபோனார்கள். இது தொடர்பாக, சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று வரும் நிலையில், உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பில் தலா ரூ.10 லட்சமும், த.வெ.க. சார்பில் தலா ரூ.20 லட்சமும் இழப்பீடு வழங்கப்பட்டது.

இந்தநிலையில், உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்குவதற்காக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் இன்று கரூர் வந்தார். இதற்கிடையே, உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு அரசு வேலைவழங்கக்கூடாது என்று ஐகோர்ட்டு மதுரைகிளையில்தொடரப்பட்ட வழக்கின் விசாரணையும் இன்று நடைபெற்றது. அவர்களுக்கு தற்காலிக பணி வழங்கலாம் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், கரூரில்உள்ளஅட்லஸ்அரங்கத்தில் நிகழ்ச்சி தொடங்கியது. திருச்சி விமான நிலையத்தில் இருந்து கரூருக்கு காரில் வருகை தந்த முதல்அமைச்சர் விஜய்க்கு வழிநெடுக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு கொடுத்தனர். நிகழ்ச்சியில், கரூர்கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 32 பேரின்குடும்பத்தில் ஒருவருக்கு, அவர்களின் கல்வி தகுதிக்கு ஏற்ற வேலைக்கான பணி நியமன ஆணைகளை முதல்அமைச்சர் ஜோசப் விஜய் வழங்க உள்ளார்.

அந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

ஒருவன்எவ்வளவுஉயரத்துக்கு சென்றாலும் மனதளவில் சில காயங்கள், வலிகளை மறக்க முடியாது; எனக்கு அனைத்தையும் விட வலியும், காயமும் ஏற்படுத்தியது கரூர் சம்பவம் தான்.

வலியோடு இருந்த என்னை ஓடி ஒளிந்து விட்டேன்எனஎன்னைக் கூறுகின்றனர்.

அன்றைக்கும் சொன்னேன்.. இன்றைக்கும் சொல்கிறேன்..நாளைக்கும் சொல்வேன்.. தில்லா சொல்வேன்... கெத்தா சொல்வேன்.

பணமா ஜனமா? அப்படி கேட்டால், என் ஜனம்தான் எனக்கு முக்கியம்.

பெரம்பலூர் செல்லும் முன் கூட்டம் அதிகமாக இருப்பதால் அங்கு செல்ல வேண்டாம் என போலீஸ் கூறியது. நாமக்கல்லில் இருந்து கரூர் வந்தபோது அங்கிருந்த காவல் துறை எங்களை அலர்ட் செய்யாதது ஏன்?

நெடுஞ்சாலையில் இருந்து எங்களை சம்பவ இடத்துக்கு அழைத்து வந்து விட்டது போலீஸ்தான். இப்படி நடந்தால் அப்படி செய்யுங்கள், அப்படி நடந்தால் இப்படி செய்யுங்கள்எனச்சொல்லிபிரஷர் போட்டது யார்?

கரூர் காவலர்களை முழுமையாக நம்பினேன். அப்போது கரூர் காவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் கொடுத்தது யார்? கரூர் சம்பவம் யார் சொல்லி நடந்து என்பது தெரியும்.

நம்ம எல்லோருக்கும் இத்தனை வலிகள், காயங்கள் கொடுத்தவர்களுக்கு 2026 தேர்தலில் தக்க பதிலடி கொடுத்து விட்டீர்கள்; ஆனால், அது மட்டும் போதாது மக்களே... எழுந்திருக்கவே முடியாத அளவிற்கு நிரந்தரமான பதிலடி கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

இனி இப்படி ஒரு அரசியல் சூழ்ச்சியை யாரும் யோசிக்கவே கூடாதுங்கறதுக்காக கரூரில் ஒரு நினைவுச் சின்னம் தவெக சார்பாக எழுப்பப்படும்.

அறிஞர் அண்ணா பிறந்தநாளன்று தாய்மாமன் தங்கமோதிரம் திட்டம் அறிமுகம் செய்யப்படும். நான் ரீல் அல்ல ரியல் தாய்மாமன்.

பேசு பேசு என்று சொல்கிறார்கள்.ஆனால் பேச ஆரம்பித்தால் வெளியே சென்றுவிடுகிறார்கள். PARTY FUND என்று சொன்னவுடன் சட்டப்பேரவையில் இருந்து ஓடிவிட்டார்கள். 5 நிமிடம் பேசிய தற்கே கொளத்தூரில் கொத்து பரோட்டா போட்டு விட்டார்கள்.

நம்ம ஆட்சி அமைந்ததில் இருந்து என்னென்னவோ சொல்றாங்க. சோபா ஆட்சி, வாஷிங் மெஷின் ஆட்சி என்றெல்லாம். அரசியல் வியாபாரம் செய்வதற்கான vending மெஷினே திமுகதான்

மத்திய அரசு கொண்டு வரும் தொகுதி மறுசீரமைப்பை தமிழகம் ஏற்காது. மேகதாது அணை தொடர்பாக திமுக அரசு முறையாக வாதாடவில்லை.

மேகதாது அணை குறித்து எங்கு பேச வேண்டுமோ அங்கு பேசுகிறோம். TALK LESS WORK MORE என்பது தான் எங்கள் கொள்கை.

கரூர் கம்பெனி ஓனர் ஒருத்தரு எங்க இருக்காருனே தெரியல... ஓடு ஓடுனு ஓடிக்கிட்டே இருக்காரு.. இன்னொருத்தரு வெளிநாட்டில் செக்கப்க்கு போயிருக்காரு.(வேட்டைக்காரன் பட பாடலை பாடுகிறார்).

தீயசக்தி இப்போது யார் கதவை தட்டிக் கொண்டு நிற்கிறது என்பது மக்களுக்கே தெரியும். தீய சக்தியும், தீர்ந்து போன சக்தியும் வேறெல்லாம் கிடையாது. கூட்டுக் களவாணிகள் எங்களுக்குள் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என நிரூபிக்க முடியுமா?. இடைத்தேர்தலில் நிரூபியுங்கள், பிறகு பேசுங்கள்.

உங்களிடம் யாராவது லஞ்சம் கேட்டால், கொடுக்க முடியாது எனச் சொல்லுங்கள். நான் இருக்கிறேன்.

தவெக ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு பைசா லஞ்சம் இல்லை, ஊழல் இல்லை. தவெக ஆட்சிக்கு வந்த பிறகு அரசு அலுவலகங்களில் வேலை டக் டக் என நடக்கிறது

தவெக ஆட்சிக்கு வந்த பிறகு அரசு அலுவலகங்களில் மக்களுக்கு மரியாதை கிடைக்கிறது. ஊழல், லஞ்சம் இல்லை என மக்கள் கூறியதை கேட்கும் போது ரொம்ப சந்தோசம்.

இப்போ நான் சொன்னதெல்லாம் ஒரு சாம்பிள் தான். இனிமே தான் அரசோட விஸ்வரூபத்தைநீங்கபார்ப்பீங்க..

இவ்வாறு முதல்அமைச்சர் ஜோசப் விஜய் பேசினார்.

## களியக்காவிளை சோதனை சாவடியில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை; ரூ 3500 பறிமுதல்



களியக்காவிளை, ஜூலை.11
தமிழக கேரள எல்லை பகுதியான களியக்காவிளையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறையின் சோதனை சாவடி அமைந்துள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கேரளா மாநிலம் செல்லும் வாகனங்கள் மற்றும் அங்கிருந்து தமிழகத்திற்கு வரும் வாகனங்களில் ஆவணங்களை சரிபார்க்கும் முக்கிய மையமாக இந்த சோதனை சாவடி செயல்பட்டு வருகிறது. இங்கு வாகனங்களுக்கான முறையான அனுமதி சீட்டுகள் மற்றும் வரி ஆவணங்கள் சரியாக உள்ளனவா? என்பதை உறுதி செய்வது இந்த சாவடியின் முக்கிய பணியாகும். இது போன்று கடத்தல் வாகனங்கள் மற்றும் கடத்தல் பெருட்களும் அதிகாரிகள் உத்தரவின் பேரில் சோதனை செய்வது வழக்கம். இந்த நிலையில் நேற்று காலை லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் ரமா தலைமையிலான 6 பேர் கொண்ட குழுவினர் இந்த சோதனை சாவடிக்கு அதிரடியாக வருகை தந்து சோதனை மேற்கொண்டனர். அவர்கள் அலுவலகத்திற்கு இருந்த ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை தீவிர விசாரணை நடத்தினர். அலுவலகத்தில் இருந்த அனைத்து பதிவேடுகளையும் கைப்பற்றி அதிகாரிகள் ஆய்வு செய்தனர். குறிப்பாக தினமும் எத்தனை வாகனங்களுக்கு அனுமதி சீட்டுகள் வழங்கப்படுகின்றன? அதற்கு வசூலிக்கப்படும் கட்டணங்கள் முறையாக அரசுக்கு செலுத்தப்படுகின்றனவா? அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ஏதேனும் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என்று பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்றது. மேலும் கடந்த காலங்களில்இங்கு முறைகேடுகள் நடந்ததாக வந்த புகார் குறித்தும் ஊழியர்களிடம் துருவி துருவி விசாரணை நடத்தப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ரூபாய் 3,500 பதிமுதல் செய்யப்பட்டது. காலை 10 மணி முதல் 12 மணி வரை 2 மணி நேரம் சோதனை நடைபெற்றது. மேலும் சில முக்கியமான ஆவணங்களை கைப்பற்றியுள்ள ரஞ்ச ஒழிப்பு போலீசார் அவற்றின் அடிப்படையில் அடுத்த கட்ட விசாரணைதொடங்கியுள்ளனர். காலை வேளையில் அரசு அலுவலகத்தில் நடைபெற்ற இந்த அதிரடி சோதனை கலியக்காவிளை எல்லைப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## கெலவரப்பள்ளி கால்வாய் சீரமைப்பு: ஜூலைக்குள் தண்ணீர் திறக்க எம்.எல்.ஏ சீனிவாசன் உறுதி



ஒசூர் ஜூலை 11:
கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் கெலவரப்பள்ளி அணை இடதுபுற பாசனக் கால்வாய் சீரமைப்புப் பணிகளை வேப்பனஹள்ளி சட்ட மன்ற உறுப்பினர் P.S சீனிவாசன் இருசக்கர வாக னத்தில் நேரில் சென்று தீவிர ஆய்வு மேற்கொண்டார். ஒசூர் ஆளூர் பகுதி முதல் சூளகிரி வரை உள்ள கால்வாய் பகுதிகளை முழுமையாகப் பார்வையிட்ட பின் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: "கடந்த ஆண்டு இக்காலவாயின்சேதமடைந்தநிலை குறித்து முன்னாள் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ₹8.5 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. அதன் அடிப்படையில் தற்போது சீரமைப்புப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று, 80 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன." விவசாயிகள் தங்கள் பாசனத் தேவைகளுக்காகக் கால்வாயில் விரைவில் தண்ணீர் திறந்து விடுமாறு விடுத்த கோரிக்கையை ஏற்று, நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியாத இடங்களுக்கும் இருசக்கர வாகனத்திலேயே நேரில் சென்று அவர் ஆய்வு செய்தார்.
மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், நடப்பு ஜூலை மாத இறுதிக்குள் அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டிற்காகப் போர்க்கால அடிப்படையில் தண்ணீர் திறந்து விடப்படும் என்று உறுதியளித்தார். இந்தஆய்வின்போதுஉள்ளூர்விவசாயப்பிரதிநிதிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகிகளில் அவசர ஆலோசனைக்கூட்டம்



கிருஷ்ணகிரி, ஜூலை 11
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி, ரகு தலைமையில் நடைப்பெற்ற இந்தக்கூட்டத்தில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநிலத் தலைவர் மாணிக்கம் தாக்கூர், பாராளுமன்ற உறுப்பினர் விஜய் ஆகியோர் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகையை குறித்தும், ஜூலை 15ஆம் தேதி கர்மவீரர் நம் மாநில முன்னாள் முதல்வர் காமராஜ் பிறந்த நாளை மாவட்டம் முழுவதும் வெகு சிறப்பாக கொண்டாடுவதுகுறித்தும், ஜூலை 15 அன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பாக குடியாத்தம் நகரில் நடைபெறும் காமராஜரின் பிறந்தநாள் விழா மற்றும் பேரணியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் சார்பாக திரளாக கலந்து கொள்வது குறித்தும் வெகு விரைவில் நடைபெற இருக்கும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் அனைத்து நிலைகளிலும் வாய்ப்புள்ள பகுதிகளையும் அதற்கு தகுதியான வேட்பாளர்கள் தேர்வு செய்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது, மேலும் இத்தக்கூட்டத்தில் போசிய கிழக்கு மாவட்ட தலைவர் எம்.சி.ரகு கர்மவீரர் காமராஜரின் பிறந்த நாளினை மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் அன்று மாலை குடியாத்தத்தில் நடைப்பெறும் காமராஜர் பிறந்த நாள் விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் கோபிநாத் தலைமையில் பெருந்திரளாக கலந்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். மேலும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகைத் தர உள்ள மாநில காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாக்கூர் மற்றும் கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய வசந்த், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கோபிநாத் உள்ளிட்ட பல தலைவர்கள் வருகைதர உள்ளனர் ஆகையால் இந்த விழாவில் அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அப்போது முன்னாள் மாவட்டத் தலைவர்கள் கிருஷ்ண மூர்த்தி, ராஜா குமாரவேல், நாராயண மூர்த்தி கிழக்கு மாவட்ட துணைத் தலைவர் பி.சி. சேகர், சேலம் ரயில்வே கோட்ட உறுப்பினர் ரகமத் துல்லா, நகர தலைவர் லலித்ஆண்டனி, பொறுப்பாளர் ஜாவித் கான், வட்டார தலைவர்கள் ரவி, நஞ்சுண்டன் மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சக்கர வர்த்தி, ஜெயவேல், கமலகண்ணன், சம்பத், குட்டி, அனுந்தராவ் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்,

## குமரியில் பெண்களின் புகைப்படங்களை ஏஐ மூலம் ஆபாசமாக இன்ஸ்டாவில் பதிவிட்ட இளைஞர் கைது



நாகர்கோவில், ஜூலை.11
இரணியல் பகுதியை சேர்ந்த பெண்களின் புகைப்படங்களை அவர்களின் சமூக வலைதள பக்கங்களில் இருந்து ஸ்கிறீன் ஷோட் எடுத்து வைத்துக்கொண்டு, அவற்றை ஏஐ தொழில் நுட்பம் மூலமாக மார்பிங் செய்து, போலி இன்ஸ்டாகிராம் ஐடியில் பதிவேற்றம் செய்து இருப்பது தெரிய வந்தது. பெண்களுக்கு களங்கம் ஏற்படுத்திய இந்த குற்ற செயலில் ஈடுபட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்க, மாவட்ட எஸ்பி ஸ்டாலினிடம் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்தக் குற்றவாளியை உடனடியாக கைது செய்ய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் பார்வதி, உதவி ஆய்வாளர் அஜ்மல் ஜெனிப் ஆகியோர் தலைமையில் போலீசார், குற்றவாளியை கைதுசெய்யும்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் இக் குற்ற செயலில் ஈடுபட்டது அ கக்கோடு பகுதியை சேர்ந்த சுபாஷ் என்பவரின் மகன் தனுஷ் (22) என்பது தெரிய வந்தது. தொடர்ந்து போலீசார் அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர் . சிறப்பாக செயல்பட்டு குற்றவாளியை கைது செய்த சைபர் கிரைம் போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ்.லிலா அலெக்ஸ். இ.ஆ.ப. அவர்கள் இன்று 1806 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள் நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சியில் வீர மரணம் அடைந்த இந்திய வீரர்களுக்கு வேலூர் மக்கான் சந்திப்பில் அமைந்துள்ள சிப்பாய்ப் புரட்சி நினைவுத்தூண் அருகே மலர் வளையம் வைத்து நினைவஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .ந.உ.சிவராமன். இ.கா.ப. வேலூர் மாநகராட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் .மு.ம.வினோத் கண்ணன் (வேலூர்), .மரு.ம.சுதாகர் (காட்பாடி), திருமதி க.சிந்து (குடியாத்தம்). முன்னாள் படை வீரர்கள் நலன் துணை இயக்குநர் லெப்டினன்ட் கர்னல் வேலு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொள்ளாச்சியில் நடைபெற இருக்கும் வி த லீடர்ஸ் முதல் மாநாடு வெற்றி பெற வேண்டி மதுரையில் பிரார்த்தனை



மதுரை, ஜூலை 11

அண்ணாமலை புதிதாக ஆரம்பித்துள்ள வி த லீடர்ஸ் இயக்கத்தின் முதல் மாநில மாநாடு கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பிரமாண்டமாக நடைபெற்று வருகிறது, இந்த மாநாட்டிற்குதமிழகமுழுவதிலும்இருந்து லட்சக்கணக்கான உறுப்பினர்கள் வருவார்கள் என்பதால் இன்றைய அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் வி த லீடர்ஸ் முதல் மாநில மாநாடு வெற்றி பெற வேண்டி மதுரை மாநகர் மேலமாசி வீதி வடக்கு மாசி வீதி சந்திப்பில் உள்ள பழமையான நேரு ஆலால சுந்தர விநாயகர் திருக்கோவிலில் மதுரை மாவட்ட நிர்வாகிகள் சார்பாக சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து விநாயகர்க்கு 108 தேங்காய் உடைத்து வழிபாடு செய்தனர். வி த லீடர்ஸ் இயக்கத்தின் மதுரை மாவட்ட நிர்வாகிகள் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். இந்நிகழ்வில் விஷ்ணுபிரசாத் பிச்சைவேல் விவேக் அன்பில் நரேஷ் ஸ்ரீராம் கணேஷ் வைரமோகன் மாரியப்பன் வழக்கறிஞர் முருகன் முத்துராஜ் வழக்கறிஞர் ராஜசேகர் விஜய் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# 14 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் இருக்கும் விளாத்திகுளம் பேரூராட்சி பூங்கா

## பழுதான விளையாட்டு உபகரணங்களால் சிறுவர்கள் காயம்



விளாத்திகுளம் ஜூலை 11

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2012ம் ஆண்டு அப்போதைய அதிமுக அரசு சார்பில் அம்பாள் நகர் முத்து பூங்கா பல ஏக்கர் பரப்பளவில், சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டு உபகரணங்கள், நடைபயிற்சி மேடை, கழிவறை வசதி அமைக்கப்பட்டது. அவ்வாறு பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், பல ஆண்டுகளாக பழுதாகி உடைந்த நிலையில் தற்போது வரை அதை சரி செய்யாமல் இருப்பதால், விளையாட்டு உபகரணங்களில் விளையா டக்கூடிய சிறுவர்களுக்கு அடிக்கடி கை, கால்களில் விபத்து ஏற்பட்டு காயம் ஏற்பட்டு வருகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விளாத்திகுளத்தை சேர்ந்த ஒரு சிறுவன் எதிர்பாராத விதமாக மின்கம்பியை தொட்ட போது, மின்சாரம் தாக்கி பூங்காவிலேயே உயிரிழந்தது குறிப்பிடத்தக்கதாகும். பூங்காவின் பராமரிப்பிற்காக மாதம் விளாத்திகுளம் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் பணம் எடுப்பதாகவும் அவ்வாறு எடுக்கப்படும் பணம் முறையாக பூங்க பராமரிப்பிற்கு செலவிடப்படவில்லை என்றும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். மேலும் பூங்கா வளாகத்தில் மின்கம்பங்களை தொடாதீர்கள் என்று அறிவிப்பு பலகை ஒட்டப்பட்டுள்ளது, பூங்கா வளாக வெளிப்பகுதியில் இருந்த ஆழ்துளை அடி பம்பை அகற்றி அதற்கு மாற்றாக மின்சார பம்பு அமைக்கப்பட்டுள்ளது அந்த மின்சாரம்பம்பு எதற்கு அமைக்கப்பட்டுள்ளது? என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டுள்ளது, பூங்காவில் உள்ள கழிவறைகள் வெறும் காட்சிப் பொருளாகவே வைக்கப்பட்டுள்ளது தவிர,கழிவறையை பராமரிப்பதற்கு நேரமில்லாத காரணத்தினால் கழிவறையை காட்சிப் பொருளாகவே மட்டும் பூங்காவில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். எனவே சிறுவர்கள் மற்றும் பொதுமக்களின் உயிரை பாதுகாக்கும் வகையில் 14 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் இருக்கும் இந்த பூங்காவை முறையாக பராமரிக்க வேண்டும் என்று விளாத்திகுளம் பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், கவுந்தப்பாடியில் உள்ள பள்ளி மாணவியர்களுக்கான சமூகநீதி விடுதியில் மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவினைமாவட்டஆட்சியர்ச.கந்தசாமி,நேற்றுபார்வையிட்டு,ஆய்வுமேற்கொண்டார்

# நாகர்கோவில் ரயில் தண்டவாளத்தில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஆண் பிணம்

நாகர்கோவில், ஜூலை. 11

நாகர்கோவில் அருகே கோட்டார் ரயில் நிலைய பகுதியில் உள்ள ரெயில்வே தண்டவாளத்தில் ஒரு ஆண் பிணமாக கிடப்பதாக நாகர்கோவில் ரெயில்வே போலீசுக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து அவர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தண்டவாளத்தில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கிடந்த ஆண் பிணத்தை கைப்பற்றி விசாரணை நடத்தினர்.

பின்பு அந்த உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர் விசாரணையில் ரெயில் தண்டவாளத்தில் பிணமாக கிடந்த அந்த நபர் யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்? என்பது தெரியவில்லை. அவருக்கு சுமார் 45 வயது இருக்கும். சட்டை மற்றும் ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்தார். தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உடல் கிடந்ததால், அவர் அந்த வழியாக ஏதோ ஒரு ரெயில் வரும்போது தண்ட வாளத்தில் படுத்து தற்கொலை செய்திருக்கலாம். என நம்பப்படுகிறது. ரெயிலில் சிக்கி பலியான அந்த நபரை அடையாளம் காண்பதில் போலீசாருக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து நாகர்கோவில் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வேலை உறுதியளிப்பு சட்டத்தை பாதுகாக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர் ஜூலை 11

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளித்து சட்டத்தை பாதுகாக்க வலியுறுத்தி தஞ்சாவூர் மாவட்டக லெக்டர் அலுவலகம் முன்பு அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்

இதில் கடந்த 20 ஆண்டுக ளாக கிராமப்புற ஏழை மக்கள் விவசாயி கள் மற்றும் பெண்கள் வாழ்வதற்கு அரசு அரணாக இருந்து வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு சட்டத்தை நீர்த்துப்போக செய்யாமல் தொடர்ந்து செயல்படுத்த வேண் டும். மத்திய அரசு கொண்டு வந்துள்ள விபி ஜி, ராம்ஜி என்ற புதிய திட்டத் தையும் அதில் உள்ள ஆபத்தான விதிமுறைகளையும் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் 100 நாட்கள் வேலையை 200 நாட்களாக உயர்த்த வேண்டும், நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் கூலி ரூபாய் 700 ஆக உயர்த்தி வழங்க வேண்டும். நகர்ப்புறங்களிலும் வேலை உறுதி அளிப்பு சட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் சுமதி தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் கலைச்செல்வி கண்டன உரையாற்றினர். மாநில குழு உறுப்பினர்கள் கலைச்செல்வி வசந்தி மாவட்ட செயலாளர் சரிதா, மாவட்ட பொருளாளர் மேரி, மாவட்ட துணை செயலாளர் அம்சவல்லி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# ரேஷன் கார்டுதாரர்களுக்கு எடை குறையாமல் பொருட்கள் வழங்க வேண்டும்

## அலுவலர்களுக்கு ஆட்சியர் சரவணன் உத்தரவு.



தருமபுரி ஜூலை 11

தருமபுரி ஒன்றியம் செந்தில் நகரில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் ரேஷன் கடையில் ஆட்சியர் சரவணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது ரேஷன் கடை மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் அத்தியாவாசிய பொருட்களான அரிசி, சர்க்கரை ,கோதுமை, துவரம்பருப்பு, பாமாயில் உள்ளிட்ட அனைத்து உணவு பொருட்களையும் அவர் பரிசோதித்து அதன் தரம் குறித்து பணியாளரிடம் கேட்டு அறிந்தார் . தொடர்ந்து ரேஷன் கடைகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் சரியான அளவில் வழங்கப்படுகிறதா? என்பதை உறுதிப்படுத்த மின்னணு தராசுகள் மற்றும் விற்பனை முனைய கருவிகள் முறையாக செயல்படுகிறதா? என்பதை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ரேஷன் கார்டுதாரர்களுக்கு உணவுப்பொருட்களை எடை குறையாமல் வழங்குவதை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதுமான அளவு அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா? என்பதை அவ்வப்போது கண்காணிக்கவேண்டும்என்றுகூறினார்.இதைதொடர்ந்து நல்லம்பள்ளி ஒன்றியம் ஏ. ஜெட்டி அள்ளி தொடக்க வேளாண்மைகூட்டுறவுகடன்சங்கத்தின்கீழ்செயல்பட்டு வரும் ஒட்டப்பட்டி ரேஷன் கடையையும் ஆட்சியர் சரவணன் திடீர் ஆய்வு செய்தார். அப்போது அந்த கடையில் உணவு பொருட்கள் அனைத்தும் தேவையான அளவிற்கு இருப்புஉள்ளதா?என்பதைஅவர்பதிவேடுகள் மூலம் சரிபார்த்து ஆய்வு செய்தார். அப்போது கடைகளில் உணவுப் பொருட்கள் வாங்க வந்த பொது மக்களிடம் ரேஷன்கடையில்அத்தியாவாசியபொருட்கள்அனைத்தும் முழுமையாகவழங்கப்படுகிறதாஎன்றுகேட்டுஅறிந்தார். அப்போது தகுதியின் அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசி, கோதுமை, பருப்பு உள்ளிட்ட அதியவாசிய பொருட்கள் அனைத்தும் தரமானதாகவும் எந்த வித குறைபாடும் இல்லாமல் வழங்க வேண்டும் என்று ரேஷன் கடை பணியாளர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மாவட்ட வழங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் கோவிந்தன், கூட்டுறவு விநியோகத் திட்ட துணை பதிவாளர் சுந்தரம் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தொப்பூரில் கார் மீது லாரி மோதி 2 பேர் காயம்

தருமபுரி ஜூலை 11

தருமபுரி மாவட்டம் தொப்பூர் கணவாயில் சேலம் நோக்கி சென்று கொண்டிருந்த லாரி திடீரென பிரேக் போட்டதால் லாரியின் பின்னால் சென்ற கார் நின்றது . அப்போது ஆந்திராவில் இருந்து ஈரோட்டுக்கு சென்ற சரக்கு லாரி அந்த காரின் பின் பகுதியில் மோதியது. இதனால் கார் சேதமடைந்தது இந்த விபத்தில் அந்த காரில் சென்ற சேலத்தைச் சேர்ந்த சம்பத் (வயது 51), தனலட்சுமி (வயது 49) ஆகியோர் லேசான காயமடைந்தனர். இதனால் இந்த பகுதியில் சிறிது நேரம் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது தொடர்பாக தொப்பூர் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# குமரியில் முதல்வர் சிறு விளையாட்டு மையங்களில் கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஜூலை. 11

குமரி மாவட்டம் முஞ்சிறை, கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் தமிழக முதல்வர் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை 110 விதியின் கீழ் தமிழ்நாட்டிற்குட்பட்ட ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு மினி விளையாட்டரங்கம் ரூ.3 கோடி மதிப்பில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் பத்மநாபபுரம் சட்டமன்றம் திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட கல்லாடிமாமூடு பகுதியில் ரூ.3 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மற்றும் நடைபயிற்சி மேற்கொள்பவர்கள் இவ்விளையாட்டு மைதானத்தினை தினந்தோறும் பயன்படுத்தி வருகிறார்கள்.

அதனைத்தொடரந்து கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட கலிங்கராஜபுரம் பகுதி மற்றும் கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருங்கல் முசாரி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ரூ.1.77 கோடி மதிப்பிலும், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ரீத்தாபுரம் லியோன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு அரங்கம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான முக்கிய நோக்கம் கிராமப்புற மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்களை தேசிய, மாநில அளவில் விளையாட்டு வீரர் வீராங்கனைகளாக மாற்றுவதற்கேயாகும். எனவே பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் கூறினார்.

தருமபுரியில்

# சுற்றுலாத்துறைக்கு சொந்தமான ஒகேனக்கல் தமிழ்நாடு ஓட்டலில் ரூ.99க்கு சிக்கன் பிரியாணி அறிமுகம்



தருமபுரி ஜூலை 11

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் சுற்றுலாத்துறைக்கு சொந்தமான தமிழ்நாடு ஓட்டலில் தமிழகத்தில் முதல் முதலாக ரூ. 99 க்கு சிக்கன் பிரியாணி அறிமுகம் விஐபிகள் மட்டும் அதிக விலை கொடுத்து சாப்பிடுவார்கள் என்று எதிர்பார்த்து வந்த நிலையில் ஏழை எளிய மக்கள் சாப்பிட வேண்டும் என்று சுற்றுலாத்துறை சார்பில் முதல் முதலில் ஒகேனக்கலில் அறிமுகம் ஆர்வமாக வாங்கிச் சென்ற சுற்றுலா பயணிகள். தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் தமிழ்நாடு ஓட்டலில் ரூ. 99 சிக்கன் பிரியாணி விற்கப்பட்டதால் சுற்றுலா பயணிகள் ஆர்வமாக வாங்கிச் சென்றனர்.

தமிழ்நாடு முழுவதும் சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் சார்பில் 33 தமிழ்நாடு ஹோட்டல்கள் செயல்பட்டு வருகிறது . அதே போல் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கலில் அரசுக்கு சொந்தமான தமிழ்நாடு ஓட்டல் செயல்படுகிறது . இங்கு வரும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பான முறையில் தங்கும் வகையிலும் சுகாதாரமான உணவினை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கும் வகையில் தமிழ்நாடு ஓட்டல் செயல்பட்டு வருகிறது . இந்த நிலையில் ஒகேனக்கலில் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவதால் அவர்களை ஈர்க்கும் வகையில் ரூ .99 ரூபாய்க்கு சிக்கன் பிரியாணி விற்கப்பட்டது . பொதுவாக சுற்றுலா தளத்தில் உணவின் விலை அதிக அளவில் இருக்கும். ஆனால் தமிழ்நாடு ஓட்டல் நிர்வாகத்தின் மூலம் மிக குறைந்த விலையில் சிக்கன் பிரியாணி விற்கப்பட்டதால் சுற்றுலா பயணிகள் ஆர்வமாக வாங்கிச் சென்றனர் . இதன் காரணமாக அதிக அளவில் விற்பனையில் நடைபெற்றது .

# குமரி மீன்பிடித்துறைமுகம், ஏவிம் கால்வாய் பணிகள்: மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



நாகர்கோவில், ஜூலை. 11

கன்னியாகுமரி மாவட்ட மீன்வளத்துறை சார்பில் தேங்காப்பட்டணம் மீன்பிடித்துறைமுகத்திற்குட்பட்ட இரையுமன்துறை பகுதியில் பிரதான அலைதடுப்பு சுவர் நீட்டிப்பு பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் தற்போது ரூ. 116.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு 85% பணிகள் முடிக்கபட்டு மீதம் உள்ள பணிகள் நடைபெற்றுவருகிறது. குறிப்பாக பிரதான அலைதடுப்புச் சுவர் நீட்டிப்பு பணி (பகுதி II) நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை கலெக்டர் பிரதாப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட பகுதி வழியாக செல்லும் ஏ.வி.எம் கால்வாயினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறுகையில்:

குமரி கடற்கரை வழியாக செல்லும் ஏ.வி.எம் கால்வாய் 34 கிலோ மீட்டர் அமைந்துள்ளது. தற்போது இந்த கால்வாய் மிகவும் மோசமான நிலையில் தண்ணீர் நீரோட்டம் தடைபட்டு பாசி நிறைந்தும், தண்ணீர் துர்நாற்றம் வீசியும், குப்பைகள் குவிந்தும் தண்ணீர் மாசடைந்து சுகாதாரம் சீர்கேடு ஏற்பட்டு நிலத்தடி நீர் மட்டம் பாதிப்படைந்துள்ளது.

கால்வாயின் பாசிகளை அகற்றி நீரோட்டத்திற்கு இருக்கும் தடைகளை நீக்கி குப்பைகளை அகற்றி தூர்வாரி சீர்படுத்த கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர், கிள்ளியூர் மற்றும் குளச்சல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள் தமிழ்நாடு அரசிற்கு தொடர்ந்து கோரிக்கை வைத்தனர். அதனடிப்படையில் கிள்ளியூர் சட்டமன்றம் கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட நீரோடி முதல் இரையுமன்துறை வரை ஏ.வி.எம். கால்வாயினை பொது சுகாதார அவசர அவசிய தேவையினை கருத்தில் கொண்டும், பொதுமக்கள் நலன் கருதியும் சீரமைத்தல் மற்றும் தூர்வாரும் பணியினை மேற்கொள்ள 25.03.2025 ல் சட்டமன்ற அறிவிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கால்வாய் தூர்வாருவதற்கு சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்து மற்றும் நிறுவனத்திடமிருந்தும் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது அடுத்த கட்ட நடவடிக்கையாக தமிழ்நாடு மாநில கடலோர மேலாண்மை ஆணையத்தின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் துணை இயக்குநர்கள் கோபிநாத் (கன்னியாகுமரி), காசிநாத பாண்டியன் (ஈரோடு), கடலரிப்பு தடுப்பு கோட்ட செயற்பொறியாளர் பிரேமலதா, கொல்லங்கோடு நகராட்சி ஆணையர் சங்கர், கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# மாற்று திறனாளிகளுக்கு அனைத்து நலத் திட்டங்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் சேவை மையம்: கலெக்டர் அறிவிப்பு



ஈரோடு ஜூலை 11

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர்கந்தசாமிநிருபர்களுக்கு பேட்டி அளித்தார் அப்போது அவர் கூறியதாவது அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தேவையான மறுவாழ்வு சேவைகளும், அரசு நலத்திட்ட உதவிகளும் இப்போது ஒரே இடத்தில் கிடைக்கும் ஒருங்கிணைந்த சேவை மையம் தான் "விழுதுகள்" மையம். மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 21 வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தேவையான மறுவாழ்வு சேவைகள் மற்றும் அரசு நலத்திட்டங்களை எளிதாகப் பெறுவதற்கு இந்தத்திட்டம் வழிவகை செய்கிறது.

ஈரோடு மாவட்டத்தில் வருவாய் கோட்ட அளவில் மொத்தம் 2 'விழுதுகள்" ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் நிபுணர்களின் மூலம் தரமான மறுவாழ்வு சேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இம்மையங்களில் பிசியோதெரபி. ஆக்குபேஷனல் தெரபி பேச்சு மற்றும் மொழிசார் சிகிச்சை உளவியல் ஆலோசனை, சிறப்புக்கல்வி. கண்பரிசோதனை. உள்ளிட்ட பல்வேறு மறுவாழ்வு சேவைகள் ஒரே இடத்தில் கிடைக்கின்றன. மேலும் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான பயிற்சி உள்ளிட்ட பல்வேறு மறுவாழ்வு சேவைகளும் வழங்கப்படுகின்றன.தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் 18 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான விழுதுகள் சேவை மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் தற்போது 11 மையங்களில் செயல்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 7 மையங்களின் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளன. இந்த வட்டார மையங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான உளவியல் ஆலோசனை, பிசியோதெரபி. சிறப்புக் கல்வி, பேச்சு மற்றும் மொழிசார் சிகிச்சை ஆகிய நான்கு முக்கிய மறுவாழ்வு சேவைகள் அவர்களின் வீட்டிற்கு அருகிலேயே வழங்கப்படுகின்றன. அவர்கள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே நேரில் சென்று, அவர்களின் தேவைகளை கண்டறிந்து. தேவையான மறுவாழ்வு சேவைகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் கிடைக்க வழிகாட்டி வருகின்றனர். கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தரமான மறுவாழ்வு சேவைகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்வதே தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது

மாவட் ஆட்சியரின் நேர்முக தவியாளர் (பொது) தேன்மொழி மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சங்கர் கணேஷ் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின் கீழ்

# கடன் உதவி பெற்று பயன் பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அழைப்பு

சேலம், ஜூலை 11

வேளாண் உற்பத்தியை மேம்படுத்தி விளை பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு உட்கட்டமைப்பு வசதிகள் மிக முக்கிய பங்காற்றுகிறது. அறுவடைக்குப் பின் இழப்பினை குறைத்து விளை பொருட்களை மதிப்பு கூட்டி விவசாயிகளுக்கு லாபகரமான விலை கிடைத்திட வேளாண் உட்கட்டமைப்பு வசதிகள் இன்றி அமையாதது. இதற்காக அரசு வேளாண் உள் கட்டமைப்பு நிதியை உருவாக்கியுள்ளது. குறிப்பாக 2026 2027 ஆம் நிதியாண்டில்இந்ததிட்டத்தின்கீழ்சேலம்மாவட்டத்திற்கு 64 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக 2 கோடி வரையிலான கடனுக்கு ஏழு ஆண்டு காலத்திற்கு 3 சதவீத வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் 10 சதவீதம் மட்டுமே பயனாளிகளின் பங்களிப்பாகும். மேலும் அரசின் மற்ற திட்டங்களில் மானியம் பெறும் விவசாயிகளும் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். இந்த திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுய உதவி குழுக்கள், சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள், விவசாயிகள் கூட்டுப் பொறுப்பு குழுக்கள், கூட்டுறவு விற்பனை சங்கங்கள், வேளாண் தொழில் முனைவோர், புதிதாக தொழில் துவங்க முன்வருபவர்கள்,வேளாண்விளைபொருட்கள்விற்பனை குழுக்கள், தேசிய மற்றும் மாநில கூட்டமைப்புகள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். அறுவடைக்குப் பிந்தைய வேளாண் திட்டங்களை மின்னணு வணிக மையங்கள், சேமிப்பு கிடங்குகள், சேமிப்பு கலங்கள், சிப்பம் கட்டும் அறைகள், குளிர் பதன கிடங்குகள், பழுக்க வைக்கும் கூடங்கள், தரம் பிரிக்கும் இயந்திரங்கள், போக்குவரத்து வசதிகள் முதன்மைப்படுத்தும் மையங்கள், பண்ணை கழிவு மேலாண்மை சார்ந்த உள்கட்டமைப்பு, மண்புழு உரம் தயாரித்தல், சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையங்கள், உயிரி எரிவாயு ஆலை, உயிரி ஊக்கி உற்பத்தி அலகுகள், துல்லிய விவசாயத்திற்கான உள்கட்டமைப்பு நாற்றங்கால் திசு வளர்ப்பு,ஹைட்ரோபோனிக் காளான் வளர்ப்பு,ஏரோபோனிக் விவசாயம், பாலி ஹவுஸ், கிரீன் ஹவுஸ்டிராக்டர்,விதைசுத்திகரிப்பு,தேன்பதப்படுத்துதல், பட்டுப்புழு வளர்ப்பு ஆகியவற்றிற்கு கடன் பெறலாம். அனைத்து பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள், பட்டியலிடப்பட்ட கூட்டுறவு வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், சிறிய நிதி வங்கிகள், வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள், தேசிய கூட்டுறவு மேம்பாட்டு கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு கடன் வங்கிகளுடன் இணைப்பில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகியவை கடன் வழங்க தகுதி உள்ள நிறுவனங்கள் ஆகும். இதில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைக்கு ரூ. 25 கோடியும், வேளாண்மை துறைக்கு ரூ.5 கோடியும், தோட்டக்கலைத் துறைக்கு ரூ 6 கோடியும், வேளாண் பொறியியல் துறைக்கு ரூபாய் 6 கோடியும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்திற்கு ரூ 5 கோடியும், தமிழ்நாடு தொழில் துறை மற்றும் வணிக துறைக்கு ரூ. 13 கோடியும், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ரூ 4 கோடியும் கடன் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு கூட்டுறவு சங்கங்களின்இணைப்பதிவாளர், தேசியமயமாக்கப்பட்ட வங்கி வேளாண்மை துறை அலுவலர்கள், தோட்டக்கலைத்துறை அலுவலர்கள், வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக அலுவலர்கள், தமிழ்நாடு தொழில் துறை மற்றும் வணிக துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம். மேலும் இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் https ://agriinfra.dac.gov.in. என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து விரிவான திட்ட அறிக்கையுடன் வங்கி கிளைகளில் விண்ணப்பித்து விவசாயிகள் பயன் பெறுமாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறியுள்ளார்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஐந்தாம் கட்டளை அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்து குறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கடரமணன், மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் (10.6.26)கள ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது அரசு அதிகாரிகள் மற்றும் தவெக முக்கிய நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# திருப்பூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம் தொடர்பான செய்தியாளர்கள் கூட்டம் நடைபெற்றது



திருப்பூர் . ஜூலை 11

தமிழ்நாடு அரசு உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு முழுவதும் மாற்றுத் திறனாளிகளுக் கென தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது, கடைக் கோடியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் அனைத்து சேவைகளும் அவர்கள் இல்லத்திற்கே சென்றடையும் வகையில் கடந்த 18ஆம் தேதி முதல் மாற்றுத்திறனாளிகளுக்கான சமூகதரவுகள்கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. எனவே, அனைத்து பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சமூகதரவுகள்கணக்கெடுப்பாளர்கள் இல்லம் தேடி வரும் பொழுது உரிமைகள் திட்ட பணியாளர்களுக்கு உங்களுடைய BDS, Aadhar, Voter ID மற்றும் அவர் கேட்கும் அனைத்து தகவல் களையும் SPDS வலைதளத்தில் பதிவேற்றம் செய்யும் பொழுது, ஆவணங்களை கொடுத்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தேவையான மறுவாழ்வு சேவைகளும், அரசு நலத்திட்ட உதவிகளும் இப்போது ஒரே இடத்தில் கிடைக்கும் ஒருங்கிணைந்த சமூக சேவை மையம் தான் "விழுதுகள்" மையம். மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 21 வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தேவையான மறுவாழ்வு சேவைகள் மற்றும் அரசு நலத்திட்டங்களை எளிதாகப் பெற இந்தத்திட்டம் உதவுகிறது. மாவட்டத்தில் வருவாய் கோட்ட அளவில் மொத்தம் 3"விழுதுகள்" ஒருங்கிணைந்தசேவைமையங்கள்அமைக்கப்பட உள்ளன. இந்த மையங்களில் பிசியோதெரபி, தொழில்முறைச் சிகிச்சை, பேச்சு மற்றும் மொழிசார் சிகிச்சை, உளவியல் ஆலோசனை, சிறப்புக் கல்வி உள்ளிட்ட மறுவாழ்வு சேவைகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. மேலும், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை எளிதாக ஒரே இடத்தில் பெறும் வகையில் இந்த மையங்கள் செயல்பட்டு வருகின்றன. UDID அட்டைக்கு விண்ணப்பித்தல், பெற்றோர் மற்றும் பாதுகாவர்களுக்கான பயிற்சி உள்ளிட்ட பல்வேறு மறுவாழ்வு சேவைகள் வழங்கப்பட உள்ளன. மேலும், தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் கீழ் 23 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான விழுதுகள் ஒருங்கிணைந்த சமூக சேவை மையங்கள் உருவாக்கப்பட்டு தற்போது அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம். கரடிவாவி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம், நம்பியாம்பாளையம் , குடிமங்கலம், கனியூர், (மடத்துக்குளம்) ஆகிய 4 இடங்களில் மையங்கள். இம்மாத இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வர இருக்கிறது. மீதமுள்ள மையங்கள் விரைவில் செயல்பாட்டிற்கு வரவுள்ளது. இந்த மையங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான உளவியல் ஆலோசனை, பியோதெரபி, சிறப்புக் கல்வி, பேச்சு மற்றும் மொழிசார் சிகிச்சை ஆகிய நான்கு வகையான மறுவாழ்வு சேவைகள் அவர்களின் வீட்டிற்கு அருகிலேயே வழங்கப்படுகின்றன இந்தத் திட்டத்தின்சிறப்பம்சமாக, 242க்கும் மேற்பட்ட முன்களப் பணியாளர்கள். கடைக் கோடியில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று, சமூக தரவுகள் கணக்கெடுப்பு செய்து, அவர்களின் தேவைகளை கண்டறிந்து, தேவையான மறுவாழ்வு சேவைகள் கிடைக்க வழிகாட்டி வருகின்றனர். கிராமம் மற்றும் நகரப் பகுதிகளில் வாழும் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் தரமான மறுவாழ்வு சேவைகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்வதே தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் நோக்கமாகும். மேலும், தகவல்களுக்கு, திருப்பூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் அல்லது அருகிலுள்ள விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தை அணுகலாம். இலவச உதவி எண் :1800 4250 111 சைகை மொழியில் தொடர்பு கொள்ள: 9498345350 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள். இக்கூட்டத்தில் , மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் (பொ) ஜெகஜோதி ஆகியோர் உடனிருந்தனர்..

# ஈரோடு கலெக்டர் தலைமையில் தேசிய மீன் வளர்ப்போர் தின விழா

ஈரோடு ஜூலை 11

ஈரோடு மாவட்டம் பவானி பெருந்தலையூரில் உள்ள புளூ ஆரா மீன்பண்ணை வளாகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் தேசிய மீன் வளர்ப்போர் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.


இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும்போது தெரிவித்ததாவது

தேசிய மீன் வளர்ப்போர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 10 ந் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. மீன் என்பது உயர்தர புரதச்சத்து நிறைந்த உணவு. மீன் உணவு சாப்பிடுவதினால் மன அழுத்தம், மாரடைப்பு ஆஸ்துமா, முன் கழுத்து கழலை போன்ற நோய்கள் ஏற்படுவதிலிருந்து தவிர்க்கப்படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் உடல் மற்றும் மூளை வளர்ச்சிக்கு மீன் உணவு மிகவும் அவசியமானது. ஈரோடு மாவட்டத்தில் காவிரி, பவானி உள்ளிட்ட ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் என ஏராளமான நீர்வளங்கள் உள்ளன. அரசு மற்றும் தனியார் நீர்நிலைகளில் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் மாவட்டத்தின் மீன் உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும். கடந்த ஆண்டில் உள்நாட்டு மீன் உற்பத்தியில் இந்திய அளவில் தமிழ்நாடு 15 வது இடத்திலும், தமிழ்நாடு அளவில் ஈரோடு மாவட்டம் 1922 டன்கள் மீன்களை உற்பத்தி செய்து 24வது இடத்திலும் உள்ளது. இந்த வளத்தை முழுமையாக பயன்படுத்தி மாவட்டத்திலும் மீன் வளர்ப்பை அதிகரிக்க வேண்டும். இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர் இத்துறையில் அதிகளவில் ஈடுபட்டு புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசின் பல்வேறு மீன் வள மேம்பாட்டுத் திட்டங்களான பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் விவசாய கடன் அட்டை திட்டம் பிரதம மந்திரி மட்சய கிசான் சம்ரிதி சஹ்யோஜன உள்ளிட்ட திட்டங்கள் மூலம் மீன் வளர்ப்போருக்கு நிதியுதவி. மானியம். வங்கிக் கடன், தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

மேலும். மீனவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தி வருமானத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீனவர்களின் கடின உழைப்பையும், நாட்டின் உணவுப் பாதுகாப்பில் அவர்கள் ஆற்றி வரும் மகத்தான பங்களிப்பையும் பாராட்டிய மாவட்ட ஆட்சித்தலைவர். தேசிய மீன் வளர்ப்போர் தின வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்தார். தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் பூர்ணசந்திரன் என்ற மீனவருக்கு சிறந்த முன்னோடி மீன் வளர்ப்போர் விருதும், சிறந்த மீனவர் கூட்டுறவு சங்கமாக பூதிமடைபுதூர் மீனவர் கூட்டுறவு சங்கமும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு விருதுகளை வழங்கினார். விழாவில் ஈரோடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அப்துல் காதர் ஜெயிலானி, மீன் ஆய்வாளர் கலைவாணி. மீன்வள சார் ஆய்வாளர்கள் ஹர்சவர்த்தினி. சதீஸ், மீன் விவசாயிகள் மற்றும் மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோவையில் தொடர்ந்து 11 நாட்கள் யோகா செய்து அசத்தல்



கோவை ஜூலை:11

தமிழக வெற்றிக்கழக தலைமையிலான அரசு,ஊழல் அற்ற ஆட்சி அமைக்க வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டு வருகிறது,ஆ கினும் இதனை தடுக்க ஏற்படும் தடைகள் நீங்க வேண்டியும் தனி மனித ஒழுக்கத்தை உலகில் உள்ள அனைவருமே கடைபிடிக்க வேண்டும் எனவும்,உலக நன்மை,போரற்ற உலகம் அமைய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து,தொடர்ந்து 11 நாட்கள்,ஜூன் 29ம் தேதி முதல்,ஜூலை 9ம் தேதி வரை,அனாசன உபவாச தியானம் எனும் தலைப்பில் யோகாசனங்கள் செய்து அசத்தியுள்ளார் கோவையை சேர்ந்த யோகா மாஸ்டர் சத்ரபதி.இவர் தனது 8 வயதில் கற்று கொண்ட இந்த யோகா பயிற்சிகளை முழுமையாக கற்று கொண்டு கடந்த 10 ஆண்டுகளாக,யுனிவர்ஸல் யோகா சென்டர் என்ற பெயரில்,பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் முதல்,திரைத்துறை பிரபலங்கள் வரை யோகா,பயிற்சிகளை அளித்து வருகின்றார்.

இந்த நிலையில் மூன்று கோரிக்கைகளை முன் வைத்து கோவை பீளமேடு புதூர்மாரியம்மன்கோயில்திடலில்,காலை முதல் மாலை வரை தொடர் யோகாசனங்களை செய்து வருகின்றார்.11வது இறுதி நாளில் இந்த சாதனை குறித்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய யோகா மாஸ்டர் சத்ரபதி கூறியதாவது,

பல்வேறு பிரபல தொலைக்காட்சிகள்,சமூக வலைதளங்களில் தனது பேட்டிகள் ஒளிபரப்பாகி பலருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி உள்ளேன்.

திரைத்துறையில் குறிப்பாக முன்னனி நட்சத்திரங்களானசூர்யா, சிலம்பரசன், குஷ்பு என பலருக்கும், யோகா பயிற்சிகளை வழங்கி உள்ளேன் இதற்காக இந்திய நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு சென்று பலதரப்பட்ட மக்களக்கும்,இந்த பயிற்சிகளை அளித்து உள்ளேன் அந்த வகையில்,இந்த வகை பயிற்சிகளை,மேலை நாடுகளான அமெரிக்கன்,பிரிட்டிஷ்,கான்சுலேட்ஸ் போன்ற பலருக்கும் யோகா கற்று கொடுத்துள்ளேன்.பெரும்பாலும் இந்தியர்களை விட,வெளிநாட்டினர் யோகா பயிற்சிகளை கற்று கொள்ள அதிக அளவில் ஈடுபாடு காட்டுகின்றனர்.

இதன் காரணமாகவே இவர்கள் 70 வயதிற்கு மேலும் நல்ல திட காத்திரமான நிலையில் உள்ளனர்.ஆனால் இந்தியர்கள் பலருக்கும் 30 வயதுக்குள் உடல் உழைப்பு இன்றி சர்க்கரை நோய்,இரத்த கொதிப்பு,இதய நோய்,உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை எடுத்து கொள்ளும் நிலை ஏடுபடுகின்றது என்றார். யோகாசனம் செய்யதால் உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி மனதளவிலுல் இளமையாக இருக்கலாம் என்றார்

எனவே அனைவரும் யோகா கற்று கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம் என்று தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கன்னியாகுமரியில் தன்னார்வலர்கள் சாலை பாதுகாப்பு நிகழ்ச்சி: எஸ் பி பங்கேற்றார்



கன்னியாகுமரி, ஜூலை.11

கன்னியாகுமரி காவல் துறை சார்பில் சாலை பாதுகாப்பு தன்னார்வலர்கள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி கன்னியாகுமரியில் நடைபெற்றது. கன்னியாகுமரி போக்குவரத்து ஒழுங்கு பிரிவு இன்ஸ்பெக்டர் செந்தில்வேலன் வரவேற்றார். கன்னியாகுமரி டிஎஸ்பி பிரகாஷ் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மாவட்ட எஸ்பி ஸ்டாலின் கலந்து கொண்டார். அவர் பேசியதாவது:

கன்னியாகுமரி காவல்துறை விபத்தில்லா குமரி என்ற இலக்கை அடைய பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறோம். அதற்கு காவல்துறை மட்டுமல்ல உங்களை போன்ற தன்னார்வலர்களின் பங்கும் அவசியம். பொதுவாக ரோட்டில் ஜல்லி சிதறி கிடக்கும். அதை நாம் எளிதில் கடந்த சென்றுவிடுவோம். ஆனால் ஒரு பைக் அதில் விழுந்து பைக்கில் செல்பவர்கள் காயமடையும் நிலை ஏற்படும். அதை தன்னார்வலர்கள் சரி செய்ய வேண்டும்.

முக்கியமாக பல இடங்களில் வைக்கப்பட்டுள்ள பேரிகார்டில் ரிப்ரெளக்டர் ஸ்டிக்கர் நிறம் மங்கிவிட்டது. அதை தன்னார்வலர்கள் காவல்துறைக்கு தகவல் தெரிவித்து சரி செய்வது, போக்குவரத்து ஒழுங்கு படுத்துவது போன்ற பணிகளில் ஈடுபட வேண்டும். போக்குவரத்தை ஒழுங்குபடுத்த கல்லூரி மாணவர்கள், ஓட்டுநர்கள் என சாலை பாதுகாப்பு தன்னார்வலர்கள் ஒருங்கிணைப்பு குழுக்கள் தொடங்கபட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் நாகர்கோவில், கன்னியாகுமரி ஆகிய இரண்டு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளது. இனி தக்கலை, மார்த்தாண்டம், குளச்சல் ஆகிய மூன்று இடங்களில் இதுபோன்ற தன்னார்வலர்கள் குழு தொடங்கப்படும். சாலை அனைவருக்கும் பொதுவானது. மாவட்டத்தில் ஆண்டுக்கு 300 சாலை விபத்து நடக்கிறது. இதில் பலர் உயிரிழக்கின்றனர். 300 விபத்து ஏற்படும் போது அந்த விபத்தால் 300 குடும்பம் பாதிக்கப்படுகிறது. நிறைய அபராதம் போடுவதால் விபத்தை குறைக்க முடியாது. விபத்து குறைய வேண்டும் என்றால் நாம் ஒவ்வொருவருக்கும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வேண்டும். அதற்கு காவல் துறையோடு நீங்கள் இணைந்து பணியாற்ற வேண்டும் இணைந்து வேலை செய்தால் விபத்துக்களை குறைக்க முடியும். கிராமங்கள் தோறும் சிசிடிவி கேமரா திட்டத்தின் மூலம் குமரி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 800 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் சாலையோர நடைபாதையில் வாகனங்கள் பார்கிங் செய்வதால் விபத்து நடக்கிறது. அதேபோல் நீங்கள் செய்யும் வேலையில் ஏதாவது ஒரு குடும்பம் ஒரு உயிர் காப்பாற்றப்பட்டால் அதுதான் திருப்தி. தற்போது ஏஐ கேமரா மூலம் அபராதம் விதிக்கப்படுகிறது. எங்களது நோக்கம் அபராதம் போடுவது கிடையாது. விபத்துகள் குறைந்த விபத்தில்லா குமரி என்ற இலக்கை நோக்கி காவல்துறை செல்கிறது. அதற்கு உங்கள் ஒத்துழைப்பு வேண்டும். என பேசினார். போக்குவரத்து சப்.இன்ஸ்பெக்டர் சுமித் ஆல்ட்டின் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கல்லூரி மாணவர்கள், ஓட்டுநர்கள் கலந்து கொண்டனர்.

# கேரள முதல்வருடன் சாமிதோப்பு பால.பிரஜாபதி அடிகளார் சந்திப்பு



தென்தாமரைகுளம், ஜூலை. 11

கேரள மாநிலம் முதல்வர் சதீசனை அய்யா வழி சமய தலைவர் குரு மகா சன்னிதானம் பால பிரஜாபதி அடிகளார் திருவனந்தபுரத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது கடந்த ஆட்சியில் கேரளா மாநிலம் திருவனந்தபுரம் தலைமைச் செயலகத்தின் அருகில் அய்யா வைகுண்ட சுவாமிக்கு அரசு சார்பில் நிதி ஒதுக்கீடு செய்து மணிமண்டபம் கட்டும் பணி தொடங்கியது. அந்த பணியை விரைந்து முடிக்க கேட்டும், திருவனந்தபுரத்தில் இருந்து சாமிதோப்பு வழியாக கன்னியாகுமரிக்கு கேரளா அரசு பஸ் இயக்கப்பட்டது.ஆனால் நிர்வாக காரணங்களால் அந்த பஸ் நிறுத்தப்பட்டது. மீண்டும் அந்த பஸ்ஸை இயக்க கேட்டும், சாமிதோப்பு அய்யா வைகுண்டசாமி தலைமை பதிக்கு அய்யாவை வழிபட முதல்வரை அழைத்தனர்.அப்போது சாமிதோப்பிற்கு வருவதாக முதல்வர் உறுதியளித்ததாக பால.பிரஜாபதி அடிகள் கூறினார். முதல்வர் சந்திப்பு நிகழ்ச்சியில் ராமபத்திரன் மற்றும் பேராசிரியர் . தர்மரஜினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள

# அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஊராட்சி மன்ற அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகங்களில் கலெக்டர் திடீர் ஆய்வு



திருப்பத்தூர்:ஜூலை:11

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திம்மனாமுத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, பள்ளியின் வகுப்பறைகள், மாணவர்களின் வருகைப் பதிவேடு, அடிப்படை வசதிகள் மற்றும் கல்வி கற்பித்தல் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து, மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள பள்ளித லைமை ஆசிரியருக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பசலிக்குட்டை பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சமையல் அறையில் உணவுப் பொருட்களின்இருப்பு,தரம்மற்றும்குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், குழந்தைகளின் எடை, உயரம் குறித்து மையத்தின் தூய்மை மற்றும் குழந்தைகளுக்கான அடிப்படை வசதிகள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஒன்றியத்திற்குட்பட்ட அதனைத்தொடர்ந்து, திருப்பத்தூர் ஊராட்சி ஜம்மணப்புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மருத்துவ பயனாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள், மருந்துகளின் இருப்பு, மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களின்வருகைப்பதிவை ஆய்வு செய்து, பொதுமக்களுக்கு தரமான மற்றும் துரிதமான மருத்துவ சேவைகளை வழங்கிட அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஜம்மணப்புதூர் ஊராட்சிமன்ற அலுவலகத்தில்மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, அலுவலகத்தின் செயல்பாடுகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் அடிப்படை சேவைகள் குறித்து ஆய்வு செய்து, பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மட்றப்பள்ளி கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, அலுவலகப் பதிவேடுகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் மனுக்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அரசு சேவைகள் பொதுமக்களுக்கு காலதாமதமின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அலுவர்களுக்கு அறிவுறித்தினார்.

இந்த ஆய்வின்போது மருத்துவர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், பள்ளி அரசு ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நல சங்கத்தின் சார்பாக நடைபெற்ற செயற்குழு கூட்டம்




மதுரை, ஜூலை 11

மதுரை மாவட்டம் ஒத்தக் கடை பகுதியில் உள்ள தனி யார் மஹாலில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நல சங்கத்தின் செயற்குழு கூட் டம் நடைபெற்றது.இதில் தலைவர் ராஜேந்திரன் துணைத் தலைவர் பத்மநாப நாயுடு செயலாளர் ராமசாமி கவுண்டர் உட்பட பால் உற் பத்தியாளர்கள் நல சங்க நிர்வாகிகள் உறுப் பினர்கள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற இந்த செயற்குழு கூட்டத்தில் பால் கொள்முதல் விலை உயர்வு கோருதல், ஆவின் பால் கூட்டுறவு அமைப்புகளில் பால் கொள்முதல் செய் யும் இடங்களிலேயே பாலின் அளவும் தர மும் பரிசோதிக்கப்படும் ஒப்புகைச் சீட்டு வழங்கி அதன் அடிப்படையில் உற்பத்தி யாளர்களுக்கு பால்பட்டு வாடா செய்திட வேண்டுதல் ஆவின் பால் தரப்பரிசோத னையில் MRF முறையை கைவிட்டு ISI தர பரிசோதனை முறையை அமல்படுத்த வேண்டும் ஆவினுக்கு பால் வழங்கும் அனைத்து கறவை மாடுகளுக்கும் 75% கட் டணசலுகையில் கால்நடை காப்பீட்டு திட் டம் வழங்க வேண்டும் மூன்றடுக்கு முறை யிலான ஆவின் பால் கூட்டுறவு கிராம அமைப்பு சங்க பணியாளர்களை பணி வரன்முறை படுத்த வேண்டும் தொகுப்பு பால் குளிர்விப்பான் பணியாளர்களை மாவட்ட ஒன்றிய பணியாளர்களாக பணி உயர்த்துதல் (or) புதிய பணியாளர்களை வேலைவாய்ப்புகள் மூலம் தேர்வு செய் தல் மாநில இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் அரசின் பங்கு முதலீடுகள் ஏற்கப்படுவதை தவிர்க்க வேண்டும் கூட் டுறவு சங்க தேர்தல் நடைமுறையில் திருத் தம் கோருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகள் தீர்மானங்களாக அரசுக்கு முன் வைக்கப்பட்டது

## கோவையில்

# கோடை கால கோ கிளாம் சிறப்பு விற்பனை கண்காட்சி



கோவை ஜூலை:11

கோவை மற்றும் அதன் சுற் றுப்புற, பகுதிகளில் உள்ள ஷாப்பிங் செய்யும் பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பை பெற் ற'கோ கிளாம்' ஷாப்பிங் கண் காட்சி பனி'ரெண்டு ஆண்டு களுக்கும்மேலாகவெவ்வேறு பண்டிகை மற்றும் பல்வேறு சீசன்களில் தமது விற்பனை கண்காட்சியை நடத்தி வருகி றது.

இந்நிலையில் கோடை கால விற்பனை கண்காட்சியாக கோவை அவினாசி சாலை நவ இந்தியா பகுதியில் உள்ள சுகுணா மண்டப அரங்கில் கோ கிளாம் தமது சிறப்பு விற்பனை கண்காட் சியை துவங்கியது.ஜூலை 10,11,12 தேதி என மூன்று நாட்கள் நடைபெற உள்ள இதில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள்,பரிசு பொருட்கள்,வீட்டு அலங்கார பொருட் கள் என நூறுக்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தங்கம் மற்றும் வெள்ளி நகை ஆப ரணங்கள்,அழகான பேஷன் ஆடைகள் குறிப்பாக கோடை காலத்திற்கு ஏற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பல் வேறு விதமான ஆடைகள் மற்றும் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட் டுள்ளன. முன்னதாக, கோக்ளாம் கண்காட் சியின் ஒருங்கிணைப்பாளர்கள் ஹீனா மற் றும் ராகுல் தலைமையில் நடைபெற்ற கண்காட்சி துவக்க விழாவில்,சிறப்பு விருந்தினர்களாக, அக்ஷிதா மயங்க்,ஸ்வேதா மூகாம்பிகா,கீதா ராம்கு மார்,நிவேதா தர்ஷன்,சதுரி ஸ்ரீஜித் ஆகி யோர் கலந்து கொண்டு கண்காட்சியை துவக்கி வைத்தனர்.

கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர்க ளான ஹீனா மற்றும் ராகுல் ஆகியோர் ஷாப்பிங் கண்காட்சி குறித்து பேசுகை யில்,சிறப்பு விற்பனை கண்காட்சியாக துவங்கப்பட்டுள்ளதாக இந்த விற்பனை கண்காட்சியில்,ஷாப்பிங் செய்ய வருபவர் களுக்கு தேவையான சிறப்பு தள்ளுபடியு டன் அனைத்து பொருட்களுக்கான அரங் குகளும் இங்கு அமைக்கப்பட்டுள்ள தாகவும்தெரிவித்தனர்.

நூறுக்கும்மேற்பட்ட அரங்குகள்அமைக் கப்பட்டுள்ள இந்த விற்பனை கண்காட்சி யில்,பெண்கள் பயன்படுத்தும் இயற்கை முறையிலான அழகுக்கலை பொருட் கள்,சிகை அலங்கார பொருட்கள்,முக அலங்கார பொருட்கள், வாசனை திரவி யங்கள் போன்றவற்றிற்கு தனி தனி அரங் குகள் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டுள்ளதாக கூறினர்.

# ரீல் தலைவர் இல்லை; ரியல் தலைவர் முதல்வரின் கரூர் விசிட் குறித்து முத்துக்குமார் கருத்து



நாகர்கோவில்: ஜுலை 11

முதலமைச்சர் விஜய் ஒரு நாள் அரசு பயணமாக கரூருக்கு சென் றார். அங்கு ரோடுஷோவிலும், பொதுக்கூட்டம் மற்றும் கூட்ட நெரிசலில் சிக்கி இறந்து போன வர்களின் குடும்பங்களுக்கு அரசு நியமன ஆணை, புதிய தொழில் கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா போன்ற பல்வேறு நிகழ்ச் சிகளில் கலந்து கொண்டார். இந் நிகழ்வை குறித்து அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் கூறிய தாவது:

கரூரில் அரசு நிகழ்ச்சியில் முதலமைச்சர் விஜய் கலந்துக் கொண்டாலும், முதல் நிகழ்ச்சியிலே கருப்பு உடையில் கலந்துக் கொண்டது என்பது ஆச்சரியமான விஷ யம் தான். கரூர் துயர சம்பவத்திற்கு இரங் கல் தெரிவிக்கும் வகையில் கருப்பு நிற உடையை அணிந்துள்ளார். மேலும் கூட்ட நெரிசலில் சிக்கி இறந்து போனவர்களில் 32 பேருக்கு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை, மற்றும் ஒருவருக்கு பணமு டிப்பு வழங்கியுள்ளார். இது போன்று தமிழக அரசியல் வரலாற்றில் எந்த கட்சி தலைவரும் செய்ததில்லை. மேலும் இறந்து போன தவெக தொண்டர்களின் நினைவாக கரூரில் நினைவு தூண் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார். முதலமைச்சர் விஜய்யின் அரசியல், மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கிறது.

முதலமைச்சர் என்கிற எந்த அலட்ட லும் இல்லாமல், மக்கள் மத்தியில் புத்வே கத்துடன் எளிமையாக பேசி அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளார். அவர் மக் கள் மத்தியில் ரீல் தலைவர் இல்லை, ரியல் தலைவர் என்பதை நிருபித்து காட்டி விட் டார். மேலும் இடைத் தேர்தலிலும் தவெக வேட்பாளருக்கு வாக்கையும் கேட்டுள் ளார். நிச்சயம் இடைத்தேர்தலில் தவெக வெற்றி பெரும் வாய்ப்பும் பிரகாசமாகவே உள்ளது. இவ்வாறு முத்துக்குமார் கூறி யுள்ளார்.

# மானியத்தில் மின் மோட்டார்கள் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் கலெக்டர் ரேவதி தகவல்




தஞ்சாவூர் ஜூலை 11

மானியத்தில் மின் மோட் டார்கள்அமைக்கவிவசாயிகள் விண்ணப் பிக்கலாம் என்று கலெக்டர் ரேவதி கூறி உள்ள னார்

தஞ்சாவூர், ஒரத்தநாடு, திரு வையாறு, பூதலூர்மற்றும்திரு வோணம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அலுவலகம்என்15கிருஷ்ணா நகர், மனோஜிப்பட்டி சாலை, தஞ்சாவூர் 613004என்ற முக வரியிலும் தொடர்பு கொண்டு பயனடைய லாம் கும்பகோணம், அம்மாபேட்டை, பாபநாசம் ,திருவிடைமருதூர், மற்றும் திருப்பனந்தாள் வட்டார ங்களை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) அலுவலகம் தொழில் பேட்டை அருகில்திருவோணம் திருவிடைமருதூர் தாலுகா கும்பகோணம் 612103என்ற முகவரி யிலும் ,பட்டுக் கோட்டை மதுக்கூர் ,பேராவூரணி மற்றும் சேதுபாவாசத்திரம் வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறி யாளர் (வேளாண் பொறியியல் )அலுவல கம் ஒருங்குமுறை வளாகம் பாளையம் பட்டுக்கோட்டை 614601என்ற முகவரி யில் தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு ள்ளது.



தருமபுரி மாவட்ட பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்குழந்தைகள்நலன்மற்றும்சிறப்புசேவைகள் துறையின் சார்பில் குழந்தைகள் இல்ல குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான பிறப்பு சான்றிதழ், ஆதார் அட்டை ,ஆதார் பிழை திருத்தம், மருத்துவ காப்பீடு மற்றும் பெயர் சேர்த்தல் உள்ளிட்ட முக்கிய சான்றிதழ்கள் பெறுவதற்கான சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் சரவணன் தொடங்கி வைத்து பார்வையிட்டார் . அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு தொழிலாளர் உதவி ஆணையராக சதீஷ்குமார் நியமனம் செய்யப்பட்டு பதவி ஏற்றுக் கொண்டார். இவரை தமிழக செங்கொடி உழைப்பாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் மனோகரன் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில் செயற்குழு உறுப்பினர் பழனியப்பன் உள்ளார்.

# பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் நெகிழி பொருட்கள் சுமார் 1000 கிலோ அளவிலான ரூ..75,000 அபராதம்



திருப்பஜூலை11

திருப்பூர் மாநகராட்சி மண்டலம்1, அவிநாசி சாலையில் உள்ள கடைகளில் தமிழகஅரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் நெகிழி பொருட்கள் சுமார் 1000 கிலோ அளவிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு ரூ..75,000 அபராதம் விதிக்கப்பட்டது. உடன் உதவி ஆணையாளர் (மண்டலம்1) கணேஷ்குமார், சுகாதாரஅலுவலர்ராமகிருஷ்ணன்,சுகாதாரஆய்வாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்



தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தனசேகரன் நகர், குறிஞ்சி நகர், பக்கிள் ஓடை அருகில்லுள்ள பகுதிகள் மற்றும் கே.வி.கே நகர் ஆகிய பகுதிகளில் சீரான குடிநீர் வழங்குவதற்காக ஆய்வு செய்ததை தொடர்ந்து அங்கு ள்ள பகுதிகளில் குடிநீர் வரும் நோத்தில் நேரில் சென்று பார்வையிட்டார். உடன் பகுதி கழக செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான சுரேஷ்குமார் , பகுதி கழக செயலாளர் ரவீந்திரன் , முன்னாள் மாமன்ற உறுப்பினர் செல்வகுமார், மாநகரஇளைஞரணிதுணைஅமைப்பாளர் சிவகுமார்(எ)செல்வின் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்



தூத்துக்குடி மாவட்டம், கோரம்பள்ளம் உள்ள அரசு தொழிற்பயிற்சிநிலையம்வளாகத்தில்சமூகநலன்மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் மகளிருக்கான தோழி விடுதி கட்டப்பட்டு வரும் கட்டடப் பணிகளை மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் அவர்கள் இன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தேர்தலுக்கு முன்பு கோரிக்கை வைத்த தாய், மகள் தொழிலாளி குடும்பத்துக்கு வீடு வழங்க உத்தரவிட்ட முதலமைச்சர் விஜய்

## அமைச்சர் ராஜ்குமார் ஆணை வழங்கினார்



தஞ்சாவூர் ஜூலை 1 1

ஏழ்மையில் இருக்கிறோம் என தேர் தலுக்கு முன்பு தாய் ,மகள் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்தனர் .இத னைத் தொடர்ந்து தொழிலாளி குடும் பத்திற்கு வீடு வழங்க த.வெ.கஅரசு உத்தரவிட்ட தை தொடர்ந்து அமைச் சர் ராஜ்குமார் அதற்கான ஆணையை நேரில் வழங்கினார்

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள உமையாள் புரத்தைச் சேர்ந்தவர் சசிகுமார். இவர் மரம் ஏறும் தொழில் செய்து வந்தார் இவருடைய மனைவி பவுசியா இவர்களுக்கு 4 குழந்தைகள் உள்ளனர் .இவர்களுக்கு நிரந்தர வீடு இல்லாததால் ஓலை குடிசை யில் தார்ப்பாய் போட்டு தங்கி வசித்து வருகின்றனர்

சட்டசபை தேர்தலுக்கு முன்பாக சசி குமார் மனைவி பவுசியாவும், மகள் சரணக்கியாவும் த.வெ.க தலைவர் விஜய்க்கு ஒரு கோரிக் கை வைத்து வீடியோ வெளியிட்டு இருந்தனர்

அதில் விஜய் அண்ணா உங்க ளைத் தான் நம்பி இருக்கிறோம் அப்பா தென்னை மரம் ஏறும் போது கீழே விழுந்து விட்டார். இதனால் வீட்டில் கஷ்டமாக இருக்கிறது சாப்பாட்டிற்கு கஷ்டப்படுகிறோம் நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் எங்க ளுக்கு வீடு கட்டி தர வேண்டும் என கண்ணீர் மல்க சாணக் கியா பேசியிருந்தார்

அதேபோல் பவுசியா பேசும்போது எங்கள் வீட்டில் உள்ள 4 வாக்கு களும் உங்களுக்குத்தான் நீங்கள் விஜய் தான் ஆட்சிக்கு வர வேண்டும். எல்லாம் மாற வேண்டும் எனது கணவரை ஆஸ் பத்திரிக்கு அழைத்துச் சென்று மருத்து வம் பார்த்து வருகிறோம்

எங்களுக்கு நீங்கள் வீடு கட்டித் தரு வதுடன் எங்களது குழந்தைகள் படிப் புக்கு வழிவகை செய்ய வேண்டும். நீங்கள் தான் கண்டிப், பாக ஆட்சிக்கு வருவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கி றது என கூறி இருந்தார்

மேலும் தங்களது குடிசை வீட்டில் த.வெ.க கொடியை ஏற்றி வைப்பது போன்று வீடியோவையும் வைலாகி வந்தது இந்த வீடியோவை பார்த்த முதலமைச்சர் விஜய் சாணக்கியர பவு சியாவின் கோரிக்கையை ஏற்று அவர் கள் தஞ்சாவூரில் குடியிருக்க வீடு வழங்க உத்தரவு பிறப்பித்தார்

அதன்படி தஞ்சாவூருக்கு வந்த வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்குமார் புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு நிர் வாக அலுவலருக்கு பவுசியாவின் குடும்பத்தினரை வரவழைத்தார்

பின்னர் அவர்களுக்கு தஞ்சாவூர் அடுத்த பிள்ளையார்பட்டியில் தமிழ் நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் திருச்சி கோட்டம் சார்பில் பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் ரூபாய் 19.48 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 286 வீடு கள் கொண்ட அடுக்குமாடி குடியிருப் பில் வீடு ஒன்றை ஒதுக்கீடு செய்துதான அதற்கான ஆணையை கலெக்டர் ரேவதி, விஜய் சரவணன் எம்எல்ஏ ஆகி யோர் முன்னிலையில் வழங்கினார்

பின்னர் அமைச்சர்கள் ராஜ்குமார் செய்தியாளர்களிடம் கூறும் போது

தமிழகம் முழுவதும் புதிய பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை ஆய்வு செய்து வருகிறேன் .மிகவும் பழுதடைந்த கட்டிடங்கள் இடிக்கப் பட்டு புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

புதிதாக கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்புகள் முதலமைச்சரி ன்கரங்களால் திறக்கப்பட்டு வீடு இல் லாத மக்களுக்கு வீடு வழங்கி ய குடி யமர்த்துவோம் என்றார்

நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்புற வாழ் விடம் மேம்பாட்டு வாரியத்தின் நிர் வாக பொறியாளர் யோகேஸ் வரன், உதவி நிர்வாக பொறியாளர் ரியோ ஜோன், இளநிலை பொறியாளர் அரி கோவிந்தன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தின் நிர்வாக பொறியாளர் பார்த்திபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# ரஹ்மானியா பள்ளியில் குறு வட்டார விளையாட்டுப் போட்டிகள் தொடக்கம்



கமுதி: ஜீலை11

இராமநாதபுரம் மாவட் டம், கமுதி வட்டத்திற்கான 2026-2027 கல்வியாண்டு பள்ளி மாணவ, மாணவிய ருக்கான குறுவட்டார விளை யாட்டுப் போட்டிகள் கமுதி கோட்டைமேடுரஹ்மானியா கார்டன் மெட்ரிக் மேல்நி லைப் பள்ளியில் தொடங் கின. நிகழ்ச்சிக்கு பள்ளியின் துணை முதல் வர் தீபா ஜாஸ்மின் தலைமை வகித்தார். பள்ளியின் ஒருங்கிணைப் பாளர் எம். முத் துப்பாண்டி வரவேற்புரை ஆற்றினார். பள் ளியின் நிர்வாகக் குழு அதிகாரி ஏ முகமது இர்ஷாத் போட்டிகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவர்கள் விளை யாட்டிலும் கல்வியிலும் சிறந்து விளங்க வாழ்த்தினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் எம். கருப்பசாமி செய் திருந்தார். இந்நிகழ்ச்சியில் கமுதி வட்டார உடற் கல்வி இயக்குநர், உடற்கல்வி ஆசிரியர் கள், பகுதி நேர உடற்கல்வி ஆசிரியர்கள், மெட்ரிக் பள்ளிகளின் உடற்கல்வி ஆசிரி யர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு போட்டிகளை சிறப்பித்தனர்.

# விளாத்திகுளம் ஸ்ரீ ஷீரடி சாய்பாபா கோவிலில் சிறப்பு ஆராதனை

## ஏராளமான பெண் பக்தர்கள் வழிபாடு



விளாத்திகுளம் ஜூலை 11

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வசந்தம் நக ரில் அமைந்துள்ள ஸ்ரீ ஷீரடி சாய்பாபா திருக்கோவிலில் வாரம்வாரம்வியாழக்கிழமை தோறும் சாய் பாபாவிற்கு சிறப்பு ஆராதனைகள் நடை பெறும்.

இதில் விளாத்திகுளம் மற் றும் சுற்றுவட்டார பகுதி களை சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு முன்னதாக ஸ்ரீ சீரடி சாய் பாபா அவர்களுடைய முழு உருவ சிலைக்கு வண்ண மலர்கள் சாற்றப்பட்டு பஜனை பாடல்கள் பாடப்பட்டு குத்து விளக்கு ஏற்றி பூ, பழம் உள்ளிட்டவற்றைக் கொண்டு பூஜைகள் செய்து தீபாரதனை காட்டி சாய்பாபாவை மனம் உருகி தரிச னம் செய்தனர். இந்நிகழ்வை முன்னிட்டு பாபாவிற்கு சிறப்பு அபிஷேகம் செய்யப் பட்டு மலர்களால் நன்கு அலங்காரம் செய் யப்பட்டிருந்து. இதை தொடர்ந்து நடை பெற்ற கூட்டுப் பிரார்த்தனையில் பாபாவின் பாடல்களை பாடியவாறு கோவிலில் நடைபெற்ற ஆர்த்தியை கண் குளிர கண்டு தரிசித்தனர். பின்னர் கோவி லுக்கு வந்திருந்த பக்தர்கள் அனைவருக் கும் பாபாவின் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் பக்தர்கள் அனை வரும் கலந்து கொண்டு உணவு அருந்தி சாய்பாபாவின் அருள் பெற்றுச் சென்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.